## மிகவும் முக்கிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் (எம்ஐடிசி)

ஒப்புதல் கடிதம், கடன் ஒப்பந்தம் ("கடன் ஒப்பந்தம்") இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் ("பிஎச்எப்எல்" அல்லது "கடன் வழங்குநர்")மற்றும் கடன் வாங்குபவருக்கு ("கடன் வாங்குபவர்" அல்லது "வாடிக்கையாளர்")இடையே ஒப்புக் கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க, கடன் ஒப்பந்தம் ("கடன் ஒப்பந்தம்"), டாப்-அப் கடன் சேர்க்கை, வழங்கல் கடிதம் மற்றும் / அல்லது பிற ஆவணங்கள் ஏதேனும் இருந்தால் (கூட்டாக "கடன் ஆவணங்கள்" என்று குறிப்பிடப்படுகிறது), முக்கிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை இந்த எம்ஐடிசி-யில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த எம்ஐடிசி ஆனது கட்டாயம் கடன் ஆவணங்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் இணைத்து படிக்கப்பட வேண்டும். கடன் ஆவணங்கள் மூலம் கடன் வாங்குபவர் பெற்ற கடன் நிர்வகிக்கப்படும். இங்கே அளிக்கப்பட்டிருக்கும் எம்ஐடிசி மற்றும் கடன் ஆவணங்களை இடையே முரண்பாடு ஏற்படும் நேரத்தில் கடன் ஆவணங்களின் நிபந்தனை மற்றும் விதிமுறைகள் செல்லுபடியாகும். வாடிக்கையாளர் கடன் ஒப்பந்தத்தை அணுக வாடிக்கையாளர் உள்நுழைவு அடையாளச்சான்றுகளை (பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்) நாங்கள் வழங்குவோம். நாங்கள்வழங்குவோம்.ஒருவேளை வாடிக்கையாளர் போர்ட்டலில் கடன் ஒப்பந்தத்தை காண முடியவில்லை என்றால், கடன் ஒப்பந்தத்தின் நகலை தருமாறு கோரிக்கையை வைக்கலாம், அதன் பின்னர் அவருக்கு கடன் ஒப்பந்தத்தின் நகல் அளிக்கப்படும்.

**விண்ணப்ப எண்.:** ________________________

**கடனின் தன்மை:** ☐ பாதுகாப்பு கடன் ☐ பாதுகாப்பற்ற கடன்
**கடன் வகை:** ☐புதியது/ பர்சேஸ் ☐பிடி ☐பிடி+ டாப் அப் ☐டாப் அப்

1. **கடன் தொகை:**

2. **வட்டி வகை**
   ☐ **ப்ளோட்டிங் விகிதம்** ☐ **நிலையான விகிதம்:**
   **வட்டி விகிதம்:**
   **மொராட்டோரியம் அல்லது மானியம்:**
   **வட்டி மாற்றி அமைக்கப்பட்ட தேதி (ஏதும் இருப்பின்):**
   **வட்டி விகிதத்தில் ஏற்படும் மாற்றங்களின் தகவல்தொடர்பு முறைகள்:** பிஎச்எப்எல் எஃப்ஆர்ஆர் அல்லது வெளிப்புற பெஞ்ச்மார்க்குகள் (கடன்கள்களுடன் இணைக்கப்பட்ட வெளிப்புற பெஞ்ச்மார்க்கிற்கு) அல்லது உள்ளகக் கொள்கைகள் அல்லது ஒழுங்குமுறை தேவைகளில் ஏற்படும் மாற்றம் அல்லது டிஃபால் நிகழ்வு, மற்றும் ஒப்பந்தத்தின் கீழ், கடன் வழங்கலுக்குப் பின், கடன் வழங்குபவருக்கு எந்தவொரு ஆவணங்களையும் வழங்குவதில் / நிறைவேற்றுவதில் கடன் வாங்குபவர் ஏற்படுத்தும் எந்தவொரு தாமதம் ஆகியவற்றின் காரணமாக, கடன் காலத்தின் போது தன் சொந்த விருப்பப்படி, கடன்

வாங்குபவருக்கு உரிய அறிவிப்புடன், தனது வட்டி விகிதத்தை எந்த நேரத்திலும் மேல்நோக்கி அல்லது கீழ்நோக்கி திருத்திக்கொள்ள பிஎச்எப்எல்-க்கு உரிமை உண்டு. வட்டி விகிதத்தில் ஏற்படும் எந்தவொரு திருத்தமும் வருங்காலத்திலிருந்து செயல்பாட்டில் இருக்கும். பதிவுசெய்யப்பட்ட தகவல் தொடர்பு முகவரிக்கு கடிதம் மூலமாகவும் / பதிவுசெய்த மின்னஞ்சல் முகவரிக்கு இமெயில் மூலமாகவும் / பதிவுசெய்த மொபைல் எண் மூலமாகவும் மற்றும் / அல்லது தன் வலைத்தளத்தைப் புதுப்பிப்பதன் மூலமாகவும் கடன் வாங்குபவருக்கு வட்டி விகிதத்தில் ஏற்படும் மாற்றத்தை பிஎச்எப்எல் தெரிவிக்கும். மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு மாற்று தகவல்தொடர்பு முறைகள் மூலமாக இதுபோன்ற தகவல்தொடர்புகளை கடன் வாங்குபவருடன் பகிர்துகொள்வது போதுமான அறிவிப்பாக இருக்கும். அத்தகைய மாற்றம் கடன் வாங்குபவருக்கு பாதகமாக இருந்தால், கடன் வாங்குபவர் 60 நாட்களுக்குள் அறிவிப்பு இல்லாமல் கடன் கணக்கை மூடலாம் அல்லது கூடுதல் கட்டணம் அல்லது வட்டி செலுத்தாமல் அதை மாற்றலாம்.

3. **கடன் தவணைக்காலம்:**

4. **தவணை வகைகள்**
   -  **டேர்ம் கடன்:** கடன் ஆவணங்களில் விவரிக்கப்பட்டுள்ளபடி சமமான மாதாந்திர தவணைகள் (இஎம்ஐ).
   -  **ப்ளெக்ஸி டேர்ம் கடன்:** கடன் ஆவணங்களில் விவரிக்கப்பட்டுள்ளபடி அசல் மற்றும் வட்டி கூறுகளை உள்ளடக்கிய மாதாந்திர தவணைகள்.
   -  **ப்ளெக்ஸி ஹைப்ரிட் கடன்:** கடன் ஆவணங்களில் விவரிக்கப்பட்டுள்ளபடி ஃப்ளெக்ஸி வட்டி மட்டுமே கொண்ட கடனின் திருப்பிச் செலுத்தும் காலத்தின் போது வட்டி கூறுகளைக் கொண்ட மாதாந்திர தவணைகள் மற்றும் ஃப்ளெக்ஸி கால கடன் காலத்தின் போது முதன்மை மற்றும் வட்டி கூறுகளை உள்ளடக்கிய மாதாந்திர தவணைகள்

**கடன் கணக்கிற்கு வாடிக்கையாளர் செய்த பணம்செலுத்தல்களை சரிசெய்தல்:**

டேர்ம் கடன்கள் (ஃப்ளெக்ஸி டேர்ம் கடன்கள் உட்பட):

a) பணம்செலுத்தல் கேட்வேகளை தவிர வேறு எந்த முறையிலும் பணம் செலுத்தும் வாடிக்கையாளர்கள் (அதாவது. ஆர்டிஜிஎஸ்/என்இஎஃப்டி/ஐஎம்பிஎஸ்/யுபிஐ போன்றவை): நிறுவனத்திடம் இருந்து அனுமதிக்கப்பட்ட நிதியைப் பெற்றவுடன் கடன் கணக்கு வரவு வைக்கப்படும், (தோல்வியுற்ற பரிவர்த்தனைகளைத் தவிர பொதுவாக அதே நாளில் வரவு வைக்கப்படும்).

b) பணம்செலுத்தல் கேட்வே மூலம் பணம் செலுத்தும் வாடிக்கையாளர்கள் (எ.கா. Bill Desk): நிறுவனம் நிதியைப் பெற்ற பிறகு, கடன் கணக்கு வரவு வைக்கப்படும் (பொதுவாக T+1 நாள், இங்கு T என்பது வாடிக்கையாளரின் கணக்கில் டெபிட் செய்யப்பட்ட தேதியைக் குறிக்கிறது).

c) நிறுவனத்தால் நிதி பெறப்படாததால், கடன் காலத்தை கணக்கிடுவதற்கு வங்கி விடுமுறைகள் விலக்கப்பட்டுள்ளன, எனவே இது T+1 நாட்களுக்கும் அதிகமாக இருக்கலாம். ஒன்றுக்கும் மேற்பட்ட வங்கி விடுமுறை இருக்கலாம் என்பதால் பணம்செலுத்தல் கேட்வேகள் மூலம் பணத்தை டிரான்ஸ்ஃபர் செய்வதற்கு முன்னர் வாடிக்கையாளர்கள் குறிப்பாக வங்கி விடுமுறைகளை சரிபார்க்க

அறிவுறுத்தப்படுகிறார்கள், வாடிக்கையாளர் வங்கி கணக்கில் டெபிட் செய்யப்படுவது மற்றும் கிரெடிட் செய்யப்படுவதற்கான வித்தியாசம் T+1 நாளுக்கு மேல் இருக்கலாம்..

d) வாடிக்கையாளரின் கணக்கில் இருந்து டெபிட் செய்யப்பட்ட பரிவர்த்தனைகளுக்கு, ஆனால் பணம் செலுத்தும் கேட்வேயில் உள்ள சிக்கல் காரணமாக சிறிது தாமதத்திற்குப் பிறகு நிறுவனத்திற்கு கிரெடிட் செய்யப்படும் பட்சத்தில், நிறுவனத்தின் கணக்கில் கடன் பெறப்பட்ட தேதியில் வாடிக்கையாளரின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

ஃப்ளெக்ஸி டேர்ம் கடனுக்கு, கடன் தொகை ரூ. 1.00 கோடியை விட அதிகமாக இருந்தால்:

a) ஃப்ளெக்ஸி பணம்செலுத்தல்களுக்கு கட் ஆஃப் நேரங்கள் சாதாரண வங்கி வேலை நாளில் 1 P.M.

b) வங்கி வேலை நாளில் 1:00 P.M. க்கு முன்னர் டிரான்ஸ்ஃபர் செய்யப்பட்ட தொகைகள்: அதே நாளில் கடன் கணக்கில் வரவு வைக்கப்படும்.

c) வங்கி வேலை நாளில் 1:00 P.M. க்கு பிறகு டிரான்ஸ்ஃபர் செய்யப்பட்ட தொகைகள்: T+1 நாளில் கடன் கணக்கில் வரவு வைக்கப்படும்.

d) வங்கி விடுமுறையில் செலுத்தப்பட்ட பணம்செலுத்தல்கள்: அடுத்த வேலை நாளில் கடன் கணக்கில் வரவு வைக்கப்படும். ஒன்றுக்கும் மேற்பட்ட வங்கி விடுமுறை இருக்கலாம் என்பதால் பணம்செலுத்தல் கேட்வேகள் மூலம் பணத்தை டிரான்ஸ்ஃபர் செய்வதற்கு முன்னர் வாடிக்கையாளர்கள் குறிப்பாக வங்கி விடுமுறைகளை சரிபார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள், வாடிக்கையாளர் வங்கி கணக்கில் டெபிட் செய்யப்படுவது மற்றும் கிரெடிட் செய்யப்படுவதற்கான வித்தியாசம் T+1 நாளுக்கு மேல் இருக்கலாம்.

e) வாடிக்கையாளரின் கணக்கில் இருந்து டெபிட் செய்யப்பட்ட பரிவர்த்தனைகளுக்கு, ஆனால் பணம் செலுத்தும் கேட்வேயில் உள்ள சிக்கல் காரணமாக சிறிது தாமதத்திற்குப் பிறகு நிறுவனத்திற்கு கிரெடிட் செய்யப்படும் பட்சத்தில், நிறுவனத்தின் கணக்கில் கடன் பெறப்பட்ட தேதியில் வாடிக்கையாளரின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

**5. பாதுகாப்பு**

- பிஎச்எப்எல் க்கு ஆதரவாக பாதுகாப்பாக வழங்கப்படும் சொத்து / கள் மற்றும் / அல்லது பிஎச்எப்எல் க்கு ஆதரவாக உருவாக்கப்படக்கூடிய வேறு எந்த இணை / பாதுகாப்பிற்கும் எதிராக விதிக்கப்படும் கட்டணம் கடனின் பாதுகாப்பாக கருதப்படுகிறது, இது பற்றி கடன் ஆவணங்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு என்பது கடனின் பாதுகாப்பிற்காக பிஎச்எப்எல் பொருத்தமானதாக கருதப்படும் அடமானம், உத்தரவாதம் மற்றும் வேறு எந்த வகையான பாதுகாப்பையும் உள்ளடக்கியது மற்றும் இவை அதற்கேற்ப கடன் வாங்குபவரால் சமர்ப்பிக்கப்படும். கடன் வாங்குபவர் பிஎச்எப்எல்-இன் தேவைக்கேற்ப அத்தகைய அசல் / தலைப்பு பத்திரங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் ஆகியவற்றின் நகலை சமர்ப்பிக்க வேண்டும்.
- இதில் கூறப்பட்டுள்ள பாதுகாப்பிற்குச் செலுத்த வேண்டிய அனைத்து கட்டணங்களுக்கும் கடன் பெறுபவர் ஏற்க வேண்டும், மேலும் அவற்றை முழு நிறைவு செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

குறிப்பு: இது ஒரு பாதுகாப்பற்ற கடன் என்றால், பாதுகாப்பு தொடர்பாக மேற்கூறிய உட்பிரிவுகள் இதற்குப் பொருந்தாது.

## 6. சொத்து / கடன் பெறுபவர்(களின்) காப்பீடு மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகள்

- பாதுகாப்பாக வழங்கப்படும் சொத்து, அனைத்து அபாயங்களிடமிருந்தும் அதற்கு எதிராக, கடன் மதிப்புக்கு சமமான அல்லது அதற்கு மேல் உள்ள தொகைக்கு முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்வது கடன் வாங்கியவரின் பொறுப்பாகும், பிஎச்எப்எல் கடன் தவணைக்காலத்தின் போது ஒரே பயனாளியாக இருக்கும். அதன் சான்றுகள் பிஎச்எப்எல் க்கு தேவைப்படும் போதெல்லாம் பிஎச்எப்எல் க்கு வழங்கப்படும்.
- காப்பீட்டு நிறுவனம் வழங்கிய காப்பீட்டு பாலிசியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப கோரல்கள் மற்றும் பாதுகாப்பு நிர்வகிக்கப்படும்.
- ஒரு மாஸ்டர் பாலிசிதாரரின் திறனில் பல்வேறு குழு காப்பீட்டு பாலிசிகளின் கீழ் பிஎச்எப்எல் அதன் வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே பதிவு செய்தலை வழங்குகிறது. காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து காப்பீட்டு பாலிசிக்கு விண்ணப்பிக்க வாடிக்கையாளரின் கோரிக்கைக்கு மட்டுமே பிஎச்எப்எல்-யின் பங்கு வரையறுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், காப்பீட்டு பாலிசியை வழங்குதல், தேவையான காப்பீட்டுத் தொகையை வழங்குதல் மற்றும் பாலிசியின் கீழ் எதிர்காலத்தில் உரிமைகோரல்களைத் தீர்ப்பது ஆகியவை காப்பீட்டு நிறுவனத்தை மட்டுமே சார்ந்திருக்கும். காப்பீடு என்பது விருப்பத்தின் அடிப்படையில் வழங்கப்படுவதாகும், மற்றும் கடன் வாங்குபவர் அதை தானாக முன்வந்து பெறுவதைக் கருத்தில் கொள்வார். பிஎச்எப்எல் எந்த உத்தரவாதத்தையும் கொண்டிருக்கவில்லை மற்றும் காப்பீட்டு தயாரிப்பு பற்றி எந்த பிரதிநிதித்துவத்தையும் வழங்காது, காப்பீட்டின் அடிப்படை விதிமுறைகள் அல்லது நிபந்தனைகள் மற்றும் நன்மைகள் மற்றும் அனைத்து கோரல்களும் காப்பீட்டு நிறுவனத்தால் செயல்முறைப்படுத்தப்படும். மேலும், காப்பீட்டு பாலிசி மற்றும் / அல்லது கோரல்களுக்கான கோரிக்கையை ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது போன்றவற்றுக்கு பிஎச்எப்எல் பொறுப்பேற்காது. காப்பீட்டு பாலிசி குறிப்பிட்டுள்ள அனைத்து அல்லது எந்தவொரு குறைகளும் காப்பீட்டு நிறுவனத்திடம் மட்டுமே நேரடியாக எடுத்துச் செல்லப்பட வேண்டும்.
- மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகள் என்பவை கோரிக்கையின் பேரில் வழங்கப்படுபவை, மேலும் கடன் வாங்குபவர் தானாக முன்வந்து அதைப் பெறுவதைக் கருத்தில் கொள்வர். பிஎச்எஃப்எல், வாடிக்கையாளர்களின் வேண்டுகோளின் பேரில் சேவை வழங்குநர்களிடம் அத்தகைய மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளுக்கு வாடிக்கையாளர்கள் விண்ணப்பிக்க மட்டுமே உதவுகிறது. பிஎச்எஃப்எல் ஆனது வழங்கப்பட்ட தயாரிப்புகள், அடிப்படை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும்/அல்லது தயாரிப்புகளின் நன்மைகள், மூன்றாம் தரப்பினரால் உரிமைகோரல்கள் / சேவைகளை செயலாக்கும் விதம் பற்றி எந்த உத்தரவாதத்தையும் கொண்டிருக்கவில்லை மற்றும் எந்தப் பிரதிநிதித்துவத்தையும் வழங்காது. வழங்கப்பட்ட மூன்றாம் தரப்பு தயாரிப்புகள் மற்றும்/அல்லது

உரிமைகோரல்களை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு, உரிமைகோரல்கள் / சேவைகள் போன்றவற்றை எந்த வகையிலும் செயல்படுத்துவதற்கு பிஎச்எ.்ப்எல் பொறுப்பாகாது. கிடைக்கும் தயாரிப்புகள் தொடர்பான அனைத்து அல்லது ஏதேனும் குறைகள் சேவை வழங்குநரிடம் மட்டுமே நேரடியாக தெரிவிக்கப்பட வேண்டும்.

**7. கடன் வழங்குவதற்கான நிபந்தனைகள்**

- பிஎச்எப்எல் மூலம் ஒப்புதல் கடிதம், கடன் ஒப்பந்தம் மற்றும் பிற கடன் ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள அனைத்து தொடர்புடைய ஆவணங்களையும் சமர்ப்பித்தல்;
- ***<u>இது ஒரு பாதுகாப்பான கடன் எனில், பின்வரும் கூடுதல் நிபந்தனைகளும் வாடிக்கையாளரால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்:</u>***
  - சொத்தின் சட்ட மற்றும் தொழில்நுட்ப மதிப்பீடு;
  - பாதுகாப்பிற்கென வழங்கப்பட்ட தெளிவான, விற்பனையாகக்கூடிய மற்றும் வில்லங்கமற்ற சொத்து;
  - இது ஒரு வீட்டுக் கடன் என்றால், பிஎச்எப்எல் க்கு கடன் பெறுபவர் சொத்து வாங்குவதற்கான சொந்த பங்களிப்பில் பணம் செலுத்தியதற்கான ஆதாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்;
  - அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின்படி மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்கள் / இணை-சட்டங்கள் / விதிகள் மற்றும் விதிமுறைகளின்படி சொத்துகள் மீது கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்;
  - சொத்துக்கான தேவையான அனைத்து ஒப்புதல்களும் (வரம்பு இல்லாமல், ஒப்புதலளிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் சட்டரீதியான ஒப்புதல்கள் உட்பட) பிஎச்எப்எல்-க்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**8. கடனை திருப்பிச் செலுத்துதல்**

- கடன் ஒப்பந்தம் அல்லது டாப்-அப் கடன் திருப்பிச் செலுத்தும் முறையில் கடன் வாங்குபவர் மற்றும் பிஎச்எப்எல் க்கு இடையில் ஒப்புக்கொள்ளப்படும் எந்தவொரு திருப்பிச் செலுத்தும் முறையில் அந்தந்த தேதிகளில் கடன் பிஎச்எப்எல் க்கு இஎம்ஐ-கள்/மாதாந்திர தவணைகள் மற்றும் பிற நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த கடன் வாங்குபவர் ஒப்புக்கொள்கிறார்.
- பிஎச்எப்எல், கடன் பெறுபவரின் வேண்டுகோளின் படி, திருப்பிச் செலுத்தும் முறையை மாற்ற ஒப்புக் கொள்ளலாம். பிஎச்எப்எல், எந்த நேரத்திலும், திருப்பிச் செலுத்தும் அட்டவணையை தன் விருப்பப்படி முழுவதுமாக திருத்தி, அதற்கேற்ப கடன் வாங்குபவருக்கு முன்கூட்டியே அறிவிக்கலாம்.
- கடன் தொகையை திருப்பிச் செலுத்துதல் மற்றும் கடன் தவணைக்காலத்திற்குள் வட்டி விகிதத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட வட்டி செலுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இஎம்ஐ/மாதாந்திர தவணை தொகை வழங்கப்படும். பிஎச்எப்எல் க்குநிலுவையிலுள்ள அனைத்து நிலுவைத் தொகைகளும் முழுமையாக திருப்பிச் செலுத்தப்படும் வரை கடன் வாங்குபவர் இஎம்ஐ-கள்/மாதாந்திர தவணைகளை தொடர்ந்து செலுத்துவதற்கு ஒப்புக்கொள்கிறார்.

9. **மீதமுள்ள தொகையை மீட்டெடுப்பதற்கான சுருக்கமான நடைமுறை**

கடன் ஒப்பந்தம் மற்றும் பிற கடன் ஆவணங்களில் ("டிஃபால்ட் நிகழ்வு") குறிப்பிடப்பட்டுள்ளபடி எந்தவொரு டிஃபால்ட் நிகழ்வும் ஏற்பட்டால், கடன் வாங்குபவருக்கு பிஎச்எஃப்எல்-க்கு வழங்கப்படும் அனைத்து நிலுவைத் தொகைகளும் செலுத்தப்பட வேண்டும். இதுபோன்ற தேவையான செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உரிமையை பிஎச்எஃப்எல் கொண்டுள்ளது. கடன் ஒப்பந்தத்தின் படி பிற கடன் ஆவணங்களின் கீழ் தாமதமாக பணம்செலுத்துதல், நிலுவைத் தொகையை வசூலித்தல் ஆகியவற்றுக்கு டிஃபால்ட் வட்டியை வசூலிக்கும் உரிமையை பிஎச்எஃப்எல் கொண்டுள்ளது. மேலும், ஒரு பாதுகாப்பான கடன் விஷயத்தில், சட்டத்தின் கீழ் கிடைக்கும் தீர்வுகளுக்கு ஏற்ப பிஎச்எஃப்எல் பாதுகாப்பை செயல்படுத்த உரிமை உண்டு. பிஎச்எஃப்எல் பின்வருவனவற்றிற்கான உரிமையை கொண்டுள்ளது:

- கடன் உட்பட நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்துவதை துரிதப்படுத்தல்.
- கடன் கோரிக்கையை வைக்கும், அல்லது கடனைப் பொறுத்தவரை கடன் வாங்குபவர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக செலுத்துமாறு கோரும்.
- அபதார வட்டி விகிதத்தில் நிர்னயித்த வட்டி மற்றும் பவுன்ஸ் கட்டணங்கள் உட்பட பொருந்தக்கூடிய வேறு எந்த அபராத கட்டணங்களையும் வசூலிக்கும்.
- கடனின் நிலுவையின்போது பொருந்தக்கூடிய சட்டத்தின் கீழ் நிறுவனத்திற்குக் கிடைக்கக்கூடிய பிற உரிமைகள் மற்றும் தீர்வுகளைப் பயன்படுத்துதல்.
- பிற நிபந்தனைகளை நிர்ணயித்தல் அல்லது நிறுவனம் பொருத்தமானதாக கருதும் போது அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல்;
- பொருந்தக்கூடிய வட்டி விகிதத்தை திருத்துதல்; மற்றும்/அல்லது
- கடன் வாங்கியவரின் அனைத்து கடன் கணக்கு விவரங்களையும் RBI, NHB, பங்குச் சந்தை, தகவல் பயன்பாடு, தணிக்கையாளர்கள், சிபில் மற்றும் பிற தகவல் அதிகாரங்கள் மற்றும் வேறு ஏதேனும் சட்டரீதியான / ஒழுங்குமுறை ஆணையம் மற்றும் / அல்லது இதன் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட பிற ஏஜென்சிக்கு வெளியிடும் உரிமை.
- தன் சொந்த விருப்பப்படி, பெயர், முகவரி, புகைப்படம், பாதுகாப்பு விவரங்கள் (பொருந்தினால்) மற்றும் கடன் வாங்குபவரின் கடன் போன்ற பிற தகவல்களை எலக்ட்ரானிக், பிரிண்ட் மற்றும் சமூக ஊடகங்களில் வெளியிடும் உரிமையைக் பிஎச்எஃப்எல் கொண்டுள்ளது, அத்தகைய வெளியீட்டில் டிஃபால்ட் நிகழ்வும் அடங்கும்; மற்றும் அத்தகைய தகவல்களை வெளியிடுவதால் கடன் வாங்குபவருக்கு ஏற்படும் எந்தவொரு தீமை மற்றும் / அல்லது சேதத்திற்கும் பிஎச்எஃப்எல் பொறுப்பல்ல என்று கடன் வாங்குபவர் ஒப்புக்கொள்கிறார்.
- தனியாக அல்லது கடனளிப்பவர் நியமிக்கப்படக்கூடிய எந்தவொரு மீட்பு முகவர்கள் அல்லது வக்கீல்கள் மூலம் பாதுகாப்பாக அளிக்கப்பட்ட சொத்தை மறுஉடைமை செய்தல்.

**10. ஆண்டு நிலுவைத்தொகை இருப்பு அறிக்கை**

ஆண்டு நிலுவைத்தொகை இருப்பு அறிக்கையை கடன் பெற்றவருக்கு கோரிக்கையின் பேரில் பிஎச்எப்எல் வழங்கும்.

**11. நியாயமான நடத்தை நெறிகள்**

நிறுவனத்தின் சரியான பயிற்சி குறியீடு ஆன்லைனில் ttps://www.bajajhousingfinance.in/notice-board என்ற இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**12. வாடிக்கையாளர் சேவைகள்**

| | |
|---|---|
| இமெயில் | bhflwecare@bajajfinserv.in |
| அழைக்க | 022 - 45297300 |
| ஆன்லைன் வாடிக்கையாளர் போர்ட்டல் | https://myaccount.bajajhousingfinance.in/#/home |
| கிளை வருகை நேரங்கள் | 10:00 AM முதல் 6:00 PM வரை |

மேலே குறிப்பிடப்பட்ட எந்தவொரு சேனல்கள் மூலம் கடன் வாங்குபவர் மூலம் எழுப்பப்படும் கேள்விகளுக்கு 7 வேலை நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

(i) **கடன் கணக்கு அறிக்கை - கடன்** கணக்கு அறிக்கையை ஆன்லைனில் பதிவிறக்கம் செய்யலாம். மாற்றாக, வாடிக்கையாளர் கிளைக்கு செல்வதன் மூலம் அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாடிக்கையாளர் சேவை எண்ணை அழைப்பதன் மூலம் அறிக்கையை பெறலாம்.

(ii) **அசல் ஆவணங்களின் நகல்** - ஒரு வேளை வாடிக்கையாளரின் சொத்தின் பத்திரகங்கள் மற்றும் இணைப்பு ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம் பாதுகாப்பான கடன் **பெறப்பட்டால்**, பத்திரங்களின் நகல் மற்றும் சொத்தின் இணைப்பு ஆவணங்கள், வாடிக்கையாளரிடமிருந்து எழுத்துப்பூர்வ கோரிக்கையைப் பெற்றபின் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் மற்றும் இவை கட்டணங்கள் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டபடி பொருந்தக்கூடிய கட்டணங்களை செலுத்துவதற்கு உட்பட்டது. கையகப்படுத்தல் / இருப்பு பரிமாற்றக் கடன்கள் இருந்தால், பரிமாற்ற வங்கி / நிதி நிறுவனத்திடமிருந்து பத்திரம் மற்றும் இணைப்பு ஆவணங்களைப் பெறுவதற்கு உட்பட்டு பத்திரம் மற்றும் இணைப்பு ஆவணங்களின் நகலை கோருவதற்கான கோரிக்கை எளிதாக்கப்படும்.

(iii) **கடனை மூடுவது/டிரான்ஸ்ஃபர் செய்வது குறித்த அசல் மற்றும் இணைப்பு ஆவணங்களைத் திருப்பித் தருவது** - பிஎச்எப்எல் மூலம் பெறப்பட்ட அசல் சொத்து ஆவணங்கள், பிஎச்எப்எல் உடன் அனைத்து/எந்தவொரு கடன் நிலுவைத் தொகையும் மூடப்பட்ட 20 வேலை நாட்களுக்குள் திருப்பித் தரப்படும்.

**13. குறை தீர்ப்பு**

உங்கள் தகவல்தொடர்புகளைப் பெற்ற 2 வேலை நாட்களுக்குள் நீங்கள் ஒப்புதல் / பதிலைப் பெறுவீர்கள்

| | |
|---|---|
| நிலை 1 | 7 வேலை நாட்களுக்குள் வாடிக்கையாளரின் கேள்விகள் மற்றும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நாங்கள் உறுதியளிக்கிறோம். (சில புகார்களுக்கு அதிக நாட்கள் ஆகலாம், அதிகபட்சம் 30 நாட்கள்). இந்த நேரத்திற்குள் எங்களிடமிருந்து வாடிக்கையாளர் பதில் பெறவில்லை என்றால், அல்லது கேள்விக்கான தீர்வில் திருப்தியடையவில்லை என்றால், வாடிக்கையாளர் பின்வரும் முகவரியில் எங்களுக்கு இமெயில் அனுப்பலாம் bhflgrievance@bajajfinserv.in |
| நிலை 2 | 3 வேலை நாட்களில் 1வது நிலையில் வழங்கப்பட்ட தீர்மானத்தில் வாடிக்கையாளர் திருப்தி அடையவில்லை என்றால், வாடிக்கையாளர் சேவைத் தலைவரிடம் Bhflcustomerexperience@bajajfinserv.in இல் புகாரளிக்கலாம்<br><br>மாற்றாக, வாடிக்கையாளர்கள் வாடிக்கையாளர் சேவைத் தலைவருக்கு பின்வரும் முகவரியில் கடிதம் அனுப்பலாம்:<br><br>பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்,<br><br>5th ஃப்ளோர், B2 செரிப்ரம் IT பார்க்,<br><br>குமார் சிட்டி கல்யாணி நகர் புனே,<br><br>மகாராஷ்டிரா பின் - 411014 |
| நிலை 3 | 5 வேலை நாட்களுக்குள் நிலை 2 இல் வழங்கப்பட்ட தீர்வில் வாடிக்கையாளர் திருப்தியடையாவிட்டால், வாடிக்கையாளர் அவரின் புகாரை பின்வரும் மின்னஞ்சல் முகவரி மூலம் குறை தீர்ப்பு அதிகாரிக்கு அனுப்பலாம்: hema.ratnam@bajajfinserv.in<br><br>மாற்றாக, வாடிக்கையாளர்கள் பின்வரும் முகவரியில் குறை தீர்ப்பு அதிகாரிக்கு கடிதம் அனுப்பலாம்:<br>ஹேமா ரத்தினம்<br>பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்,<br>5th ஃப்ளோர், B2 செரப்ரம் IT பார்க்,<br>குமார் சிட்டி கல்யாணி நகர் புனே,<br>மஹாராஷ்டிரா பின் - 411014 |
| நிலை 4 | வாடிக்கையாளருக்கு திருப்தி அளிக்கும் வகையில் புகார் தீர்க்கப்படாவிட்டால், புகார் அளிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள், வாடிக்கையாளர்கள் National Housing Bank ஐ அணுகி தங்கள் புகாரை ஆன்லைன் முறையில் (https://grids.nhbonline) என்ற இணைப்பில் பதிவு செய்யலாம் அல்லது (https://nhb.org.in/.) இல் உள்ள குறைகள் பிரிவின் கீழ் கிடைக்கும் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் அஞ்சல் மூலம் ஆஃப்லைன் முறையில் அனுப்பலாம்<br><br>**நேஷனல் ஹவுசிங் பேங்க்,**<br>மேற்பார்வைத் துறை,(<br>புகார் தீர்ப்பு செல்),<br>4th ஃப்ளோர், கோர்-5A, இந்தியா ஹேபிடேட் சென்டர்,<br>லோதி ரோடு,நியூ டெல்லி- 110003 |

14. **குறை தீர்க்கும் செயல்முறை**

கடன் வாங்குபவர் bhflgrievance@bajajfinserv.in க்கு எழுதும்போது கீழே குறிப்பிடப்பட்ட செயல்முறைகள் பின்பற்றப்படுகின்றன:

- வாடிக்கையாளர் வினவல் / புகாரைப் புரிந்துகொள்ள வாடிக்கையாளர் சேவை நிர்வாகி முழு இமெயிலையும் படிக்கிறார்
- வாடிக்கையாளர் தனது கூறப்பட்ட மற்றும் குறிப்பிடப்படாத தேவைகளைப் புரிந்து கொள்ள அழைக்கப்படுகிறார்
- குறை தீர்க்கும் குழு வரையறுக்கப்பட்ட காலக்கெடுவின்படி புகாரை தீர்க்க உள் துறைகளுடன் ஒருங்கிணைக்கப்படுகிறது.
- 7 வேலை நாட்களில் வரையறுக்கப்பட்ட டிஏடி க்குள் தீர்மானம் சாத்தியமில்லை என்றால், உள் மற்றும் வெளிப்புற சார்புகள் காரணமாக, கடன் வாங்குபவருக்கு காலக்கெடுவுகளுடன் இடைக்கால பதில் அனுப்பப்படும்.
- அனைத்து கேள்விகளும் இமெயில் மற்றும் தொலைபேசி அழைப்பு மூலம் தீர்க்கப்படும்.

உறுதியளிக்கப்பட்ட காலக்கெடுவில் ஏதேனும் நீட்டிப்பு தேவைப்பட்டால், சரியான நேரத்தில் புதுப்பிப்பு கடன் வாங்குபவருக்கு அனுப்பப்படும்.

15. **கட்டணங்கள் மற்றும் பிற வசூலிப்புகள்**

கீழே குறிப்பிட்டுள்ள கட்டணங்கள் பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் சொந்த விருப்பப்படி மாற்றப்படும். ஏதேனும் மாற்றங்கள் இருப்பின், கடன் வாங்குபவர்கள் பிஎச்எஃப்எல் இன் வலைத்தளமான https://www.bajajhousingfinance.in/notice-board, இல் குறிப்பிடப்பட்டுள்ள சமீபத்திய கட்டண அட்டவணையைப் பார்வையிடலாம், அதில் இவை பொருந்தும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் கடன் வாங்குபவரின் கட்டணம் போன்ற செலுத்த வேண்டிய அதிகபட்ச தொகையைக் குறிக்கின்றன. கடன் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் செலுத்த வேண்டிய சரியான தொகையை விவரிக்கிறது. சிறப்பாக குறிப்பிடப்படாவிட்டால், செலுத்தப்பட்ட கட்டணங்கள் திருப்பிச் செலுத்தப்படாது.

| வரிசை. எண். | கட்டணத்தின் தன்மை | கட்டணத்தின் பெயர் | எப்போது செலுத்த வேண்டும் | ஃப்ரீக்வென்சி | தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | வீட்டுக் கடன்/சொத்து கடன் மீதான கட்டணங்கள் | செயல்முறை கட்டணங்கள் | விண்ணப்பிக்கும் போது | ஒருமுறை | கடன் தொகையில் 7% வரை + ஜிஎஸ்டி பொருந்தும் |
| 2. | டாப்-அப் கடனுக்கான கட்டணங்கள் | செயல்முறை கட்டணங்கள் | விண்ணப்பிக்கும் போது | ஒருமுறை | கடன் தொகையில் 7% வரை + ஜிஎஸ்டி பொருந்தும் |

<table>
<tr><td>3.</td><td>பாதுகாப்பற்ற கடனுக்கான கட்டணங்கள்</td><td>செயல்முறை கட்டணங்கள்</td><td>விண்ணப்பிக்கும் போது</td><td>ஒருமுறை</td><td>கடன் தொகையில் 7% வரை + ஜிஎஸ்டி பொருந்தும்</td></tr>
<tr><td>4.</td><td>அபராதக் கட்டணங்கள்/ டிஃபால்ட் வட்டி விகிதம்</td><td>கூடுதல் வட்டி</td><td>திரட்டலின் மீது</td><td>மாதாந்திரம்</td><td>நிலுவை பொருந்தக்கூடிய வட்டி விகிதத்திற்கு ஆண்டுக்கு 24% கூடுதல்</td></tr>
<tr><td>5.</td><td>விலைகளை ஈடுசெய்வதற்கானச் செலவுகள்</td><td>தற்செயலான செலவுகள்</td><td>ஏற்படும் செலவுகளின் மீது</td><td></td><td>உண்மையானவை</td></tr>
<tr><td>6.</td><td>சட்டரீதியான கட்டணங்கள்</td><td>முத்திரை வரி/MODT/MOE</td><td>தொடர்புடைய சட்டங்களின்படி</td><td>ஒருமுறை</td><td>மாநில சட்டங்களின்படி பொருந்தும்</td></tr>
<tr><td>7.</td><td>குறைந்த விகிதத்திற்கு மாற்றுதல்</td><td>கட்டணங்களை மாற்றுதல்</td><td>வட்டி திருத்தத்தில்</td><td>ஒவ்வொரு வட்டி திருத்தத்தில்</td><td>நிலுவையிலுள்ள அசல் தொகையில் 4.5% வரை + ஜிஎஸ்டி பொருந்தும்</td></tr>
<tr><td>8.</td><td>வட்டி கணக்கீட்டில் மாற்றம் (எ.கா. பிஎச்எப்எல் FRR-யிலிருந்து ரெப்போ விகிதம் மற்றும் வைஸ்-வெர்சா)</td><td>கட்டணங்களை மாற்றுதல்</td><td>வட்டி கணக்கீட்டு மாற்றம்</td><td>ஒவ்வொரு மாற்றம் மீதும்</td><td>நிலுவையிலுள்ள அசல் தொகையில் 4.5% வரை + ஜிஎஸ்டி பொருந்தும்</td></tr>
<tr><td>9.</td><td>அடமான அசல் கட்டணங்கள் (MOF) (திரும்பப்பெறமுடியாத தொகை) - பாதுகாப்பான கடன்களுக்கு</td><td>செயலாக்க கட்டணங்களுக்கும் மேலான MOF</td><td>விண்ணப்பிக்கும் போது</td><td>ஒருமுறை</td><td>ரூ. 10000 வரை + ஜிஎஸ்டி பொருந்தும்</td></tr>
<tr><td>10.</td><td>பவுன்ஸ் கட்டணம்</td><td>இதர. ரசீதுகள்</td><td>காசோலை/ECS/NACH நிராகரிப்பு மீது</td><td>செலுத்தப்படாத நிராகரிப்பு எண்ணிக்கையை சார்ந்துள்ளது</td><td><table>
<tr><td>கடன் தொகை (ரூ.யில்)</td><td>பவுன்ஸ் கட்டணங்கள் (ரூ.யில்)</td></tr>
<tr><td>அது வரை 15,00,000</td><td>500</td></tr>
<tr><td>15,00,001 - 30,00,000</td><td>1,000</td></tr>
<tr><td>30,00,001 - 50,00,000</td><td>1,500</td></tr>
<tr><td>50,00,001 - 1,00,00,000</td><td>2,000</td></tr>
<tr><td>1,00,00,001 - 5,00,00,000</td><td>3,000</td></tr>
<tr><td>5,00,00,001 - 10,00,00,000</td><td>5,000</td></tr>
<tr><td>10,00,00,001 & மேலே</td><td>10,000</td></tr>
</table></td></tr>
<tr><td>11.</td><td>காசோலை பரிமாற்றக் கட்டணங்கள்</td><td>இதர இரசீதுகள்</td><td>கோரிக்கையின் பேரில்</td><td>தேவைப்படும்போது</td><td>NIL</td></tr>
<tr><td>12.</td><td>பத்திரப் பரிமாற்றக் கட்டணங்கள்</td><td>இதர இரதீதுகள்</td><td>கோரிக்கையின் பேரில்</td><td>தேவைப்படும்போது</td><td>NIL</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | வெளிப்புற கருத்து கட்டணம் | இதர இரசீதுகள் | ஏற்படும் செலவுகளின் மீது | தேவைப்படும்போது | ஏற்பட்ட செலவுகளின்படி |
| 14 | ஒப்புதலில் இருந்து 6 மாதங்களுக்கு பிறகு கடனை மறு மதிப்பீடு செய்தல் | செயல்முறை கட்டணங்கள் | மறு-விண்ணப்பத்தின் போது | ஒருமுறை | பொருந்தும் அடமான அசல் கட்டணம் |
| 15 | கணக்கு அறிக்கையின் ஹார்டு காபி | இதர இரசீதுகள் | கோரிக்கையின் பேரில் | ஒரு கோரிக்கைக்கு | ஒரு கோரிக்கைக்கு ரூ. 500 வரை + ஜிஎஸ்டி பொருந்தும் |
| 16 | தற்போதுள்ள கடனை புதிய தயாரிப்புக்கு மாற்றுதல் (டேர்ம் கடன்/ ஃப்ளெக்ஸி டேர்ம் கடன்/ ஃப்ளெக்ஸி ஹைப்ரிட் கடன்) | மாற்றுதல் கட்டணம் | மாற்றுதல் மீது | ஒவ்வொரு மாற்றத்திலும் | நிலுவையிலுள்ள அசல் தொகையில் 2% வரை + ஜிஎஸ்டி பொருந்தும் |
| 17 | ஃப்ளெக்ஸி கடன் கட்டணம் | செயல்முறை கட்டணங்கள் | ஃப்ளெக்ஸி டேர்ம் கடன் அல்லது ஃப்ளெக்ஸி ஹைப்ரிட் கடன் பெறுவதன் மூலம் | ஒருமுறை | கடன் தொகையில் 2% வரை + ஜிஎஸ்டி பொருந்தும் |
| 18 | ஃப்ளெக்ஸி ஆண்டு பராமரிப்பு கட்டணம் - ஃப்ளெக்ஸி ஹைப்ரிட் கடன் | ஆண்டு பராமரிப்பு கட்டணம் | ஃப்ளெக்ஸி ஹைப்ரிட் கடன் மீது பொருந்தும் | வருடாந்திர கட்டணம் | ஃப்ளெக்ஸி வட்டி மட்டுமே கொண்ட கடன் திருப்பிச் செலுத்தும் தவணைக்காலத்தின் போது ஒப்புதலளிக்கப்பட்ட தொகை மீது 1% வரை + ஜிஎஸ்டி பொருந்தும் மற்றும் ஃப்ளெக்ஸி டேர்ம் கடன் தவணைக்காலத்தின் போது கிடைக்கும் ஃப்ளெக்ஸி கடன் வரம்பில் 1% வரை + ஜிஎஸ்டி பொருந்தும் |
| 19 | ஃப்ளெக்ஸி ஆண்டு பராமரிப்பு கட்டணம் - ஃப்ளெக்ஸி டேர்ம் கடன் | ஆண்டு பராமரிப்பு கட்டணம் | ஃப்ளெக்ஸி டேர்ம் கடன் மீது பொருந்தும் | வருடாந்திர கட்டணம் | கிடைக்கக்கூடிய ஃப்ளெக்ஸி கடன் வரம்பில் 1% வரை + ஜிஎஸ்டி பொருந்தும் |
| 20 | CERSAI கட்டணங்கள் (பாதுகாப்பான கடன்களுக்கு) | CERSAI பதிவுக்கான கட்டணங்கள் | விண்ணப்பிக்கும் போது | ஒருமுறை | ஒவ்வொரு கடனுக்கும், CERSAI+ ஜிஎஸ்டி மூலம் விதிக்கப்படும் கட்டணங்களின்படி பொருந்தும் |
| 21 | பாதுகாப்பு கட்டணம் | செயல்முறை | ஆன்லைன் விண்ணப்பத்தில் | ஒருமுறை | ரூ. 9999 + ஜிஎஸ்டி பொருந்தும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (பாதுகாப்பான கடன்களுக்கு) | கட்டணங்கள் | | | |
| 22 | ஆவணங்களின் நகல்களுக்கான கட்டணங்கள் (பாதுகாப்பான கடன்களுக்கு) | இதர இரசீதுகள் | கோரிக்கையின் பேரில் | ஒரு கோரிக்கைக்கு | குறைந்தபட்ச கட்டணம் ரூ. 500/- 30 பக்கங்கள் வரை மற்றும் அதன் பிறகு ஒவ்வொரு கூடுதல் பக்கத்திற்கும் ரூ. 3/- + ஜிஎஸ்டி பொருந்தும் |
| 23 | முடிக்கப்பட்ட கடன்கள் மீது டாகுமெண்ட் ரெட்ரைவல் கட்டணங்கள் | இதர இரசீதுகள் | கோரிக்கையின் பேரில் | ஒரு கோரிக்கை | பிஎச்எஃப்எல் மூலம் அசல் சொத்து ஆவணங்களை சேகரித்தல்' தகவல் பரிமாற்றம் செய்யப்பட்ட 15 நாட்களுக்குள் கடன் வாங்கியவர் மூடிய கடனின் அசல் ஆவணங்களை சேகரிக்கவில்லை என்றால், ரூ. 1000/- (ஜிஎஸ்டி உட்பட) கட்டணம் விதிக்கப்படும். |

## பகுதி-பணம்செலுத்தல் கட்டணங்கள்

| **<u>வணிக நோக்கத்தைத் தவிர தனிநபர்கள் / தனிநபர்கள் அல்லாதவர்களுக்கான ஃப்ளோட்டிங் விகிதக் கடன்கள்</u>** | | | |
|---|---|---|---|
| | **டேர்ம் கடன்** | **ஃப்ளெக்ஸி டேர்ம் கடன்** | **ஃபிளக்ஸி ஃஹைப்ரிட் கடன்** |
| **கால நேரம் (மாதங்கள்)** | >1 | >1 | >1 |
| **பகுதியளவு முன்கூட்டியே அடைத்தல் கட்டணங்கள்** | இல்லை | இல்லை | இல்லை |
| **முழு அளவு முன்கூட்டியே செலுத்தல்கட்டணங்கள்** | இல்லை | இல்லை | இல்லை |
| **<u>வணிக நோக்கத்திற்காக தனிநபர் / தனிநபர் அல்லாதவர்களுக்கான ஃப்ளோட்டிங் விகிதக் கடன்கள்</u>**<br><br>**<u>நிலையான விகித கடன்கள்: அனைத்து கடன் வாங்குபவர்கள் (தனிநபர்கள் உட்பட)</u>** ** | | | |
| | **டேர்ம் கடன்** | **ஃப்ளெக்ஸி டேர்ம் கடன்** | **ஃபிளக்ஸி ஃஹைப்ரிட் கடன்** |
| **கால நேரம் (மாதங்கள்)** | >1 | >1 | >1 |
| **பகுதியளவு முன்கூட்டியே அடைத்தல் கட்டணங்கள்** | பகுதியளவு பணம்செலுத்தல் மீது 2% * | இல்லை | இல்லை |
| **முழு அளவு முன்கூட்டியே அடைத்தல் கட்டணங்கள்** | அசல் நிலுவையில்/நிலுவையில் உள்ள ஃப்ளெக்ஸி கால கடன் வரம்பில் 4%* | கிடைக்கும் ஃப்ளெக்ஸி கடன் வரம்பு மீது 4%* | ஃப்ளெக்ஸி வட்டி மட்டுமே கொண்ட கடனின் திருப்பிச் செலுத்தும் தவணைக்காலத்தின் போது அனுமதிக்கப்பட்ட தொகை மீது 4%*; மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஃப்ளெக்ஸி டேர்ம் கடன் காலத்தில் கிடைக்கும் ஃப்ளெக்ஸி கடன் வரம்பில் 4%* |

* முன்கூட்டியே செலுத்த வேண்டிய கட்டணங்களுடன் கூடுதலாக பொருந்தக்கூடிய ஜிஎஸ்டி கடன் வாங்குபவர் மூலம் வசூலிக்கப்படும்.

** கடன் வாங்குபவர் தங்கள் சொந்த ஆதாரங்களில் இருந்து வீட்டுக் கடனை அடைத்திருந்தால் அதற்கு கட்டணங்கள் இல்லை. "சொந்த ஆதாரங்கள்" என்பவை வங்கி/ எச்எஃப்சி/ என்பிஎஃப்சி மற்றும்/அல்லது ஒரு நிதி நிறுவனத்திலிருந்து கடன் வாங்குவதைத் தவிர வேறு ஆதாரங்களைக் குறிக்கிறது

**கடனின் நோக்கம்: பின்வரும் கடன்கள் வணிக நோக்கத்திற்கான கடன்களாக வகைப்படுத்தப்படும்:**

- குத்தகை வாடகை தள்ளுபடி கடன்கள்.
- தொழில் நோக்கத்திற்காக பெறப்பட்ட சொத்து மீதான கடன்கள் அதாவது நடப்பு மூலதனம், கடன் ஒருங்கிணைப்பு, தொழில் கடனை திருப்பிச் செலுத்துதல், தொழில் விரிவாக்கம், தொழில் சொத்தைக் கையகப்படுத்தல் அல்லது இவை போன்ற நிதிகளின் இறுதி பயன்பாடு.
- குடியிருப்பு அல்லாத சொத்துக்களை வாங்குவதற்கான கடன்.
- குடியிருப்பு அல்லாத சொத்தின் பத்திரம் மீதான கடன்.
- தொழில் நோக்கத்திற்கான டாப் அப் கடன்கள் அதாவது நடப்பு மூலதனம், கடன் ஒருங்கிணைப்பு, தொழில் கடனை திருப்பிச் செலுத்துதல், தொழில் விரிவாக்கம், தொழில் சொத்தைக் கையகப்படுத்தல் அல்லது இவை போன்ற நிதிகளின் இறுதி பயன்பாடு.

மேலும், தற்போதைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கூடுதலாக பின்வரும் நிபந்தனைகள் பொருந்தும்:

A. **முன்கூட்டியே-பணம்செலுத்தலுக்கான நிபந்தனைகள்**

1. பகுதியளவு முன்கூட்டியே செலுத்தல் தொகை குறைந்தபட்சம் 1 இஎம்ஐ/மாதாந்திர தவணைக்கு சமமாகவோ அல்லது அதற்கு அதிகமாகவோ இருக்க வேண்டும்

2. முதல் இஎம்ஐ/மாதாந்திர தவணையை கடன் வாங்குபவர் செலுத்திய பிறகு மட்டுமே, முழு மற்றும்/அல்லது பகுதியளவு முன்கூட்டியே செலுத்தலை செய்ய முடியும்.
3. நடப்பு மாதத்தின் 25வது நாளிலிருந்து அடுத்த மாதத்தின் 3வது நாள் வரை (இரண்டு நாட்களும் உள்ளடங்கலாக) காசோலைகள் / டிமாண்ட் டிராஃப்ட்கள் மூலம் செய்யப்பட்ட பகுதிப் பணம்செலுத்தல்கள்/முன்கூட்டியே செலுத்தல் தவிர, கடன் வாங்கியவர் (கள்) செய்த பகுதியளவு பணம்செலுத்தல்/முன்கூட்டியே செலுத்தல் ஆகியவை மாதம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்படும்.ஃப்ளெக்ஸி டேர்ம் கடன்கள் மற்றும்/அல்லது ஃப்ளெக்ஸி ஹைப்ரிட் கடன்களில் இருந்து பகுதியளவு முன்கூட்டியே செலுத்தும் கட்டணங்கள் எதுவுமில்லை.

4. முன்கூட்டியே அடைத்தல்(ஃபோர்குளோசர்) கடிதம் வழங்கல்: கோரிக்கை தேதியிலிருந்து 21 நாட்கள்.

5. ஃப்ளெக்ஸி டேர்ம் கடன்கள் மற்றும்/அல்லது ஃப்ளெக்ஸி ஹைப்ரிட் கடன்களில் இருந்து பகுதியளவு முன்கூட்டியே செலுத்தும் கட்டணங்கள் எதுவுமில்லை.

இந்த எம்ஐடிசி கடன் சில முக்கிய விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் கொண்டுள்ளது என்பதும், முந்தைய சந்தர்ப்பத்தில் கடன் வாங்குபவர் ஏதேனும் பெற்றிருந்தால் அது எம்ஐடிசி யை மீறுவதும் இதன்மூலம் ஒப்புக் கொள்ளப்படுகிறது. மேலும், கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைகளையும் அவற்றால் செயல்படுத்தப்படும் / செயல்படுத்தப்பட வேண்டிய பிற பாதுகாப்பு ஆவணங்களையும் குறிப்பிடவும் நம்பவும் தரப்பினர்கள் நிபந்தனையின்றி ஒப்புக்கொள்கின்றனர்.

கடன் வாங்கியவர் மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைக் கொண்ட அனைத்து 14 பக்கங்களையும் படித்துப் புரிந்துகொண்டதாக ஒப்புக்கொள்கிறார், மேலும் எம்ஐடிசி- இன் முதல் மற்றும் கடைசிப் பக்கத்தில் அவரது கையொப்பத்தை இடுகிறார்/பொது முத்திரையை ஒட்டுகிறார். எம்ஐடிசி- இன் ஒவ்வொரு பக்கத்திலும் கடன் வாங்குபவர்கள் கையொப்பமிடத் தேவையில்லை என்பதையும், எம்ஐடிசி- இன் முதல் மற்றும் கடைசிப் பக்கத்தில் உள்ள கையொப்பம் போதுமானதாக இருக்கும் என்பதையும் கடன் வாங்குபவர் மேலும் ஒப்புக்கொண்டு உறுதிப்படுத்துகிறார்.

மேற்கண்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கடன் வாங்குபவர் / கள் படித்தனர் அல்லது இவை கடன் வாங்கியவருக்கு பிஎச்எப்எல்-இன் திரு. /திருமதி. /செல்வி.____________________________________அவர்கள் மூலம் படித்துக் காண்பிக்கப்பட்டது, எனவே இதை கடன் வாங்கியவர்/கள் புரிந்து கொண்டுள்ளனர்.

***ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால் ஆங்கில மொழி ஏற்கப்படும்.*

⊗
**(கடன் வாங்குபவர்களின் கையொப்பம் அல்லது கட்டைவிரல் ரேகைப்பதிவு)**
**கடன் வாங்குபவரின் பெயர்(கள்):**

⊗
**(பிஎச்எப்எல் இன் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் கையொப்பம்)**
**அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரரின் பெயர்**

**தேதி** **இடம்**

**குறிப்பு: கடன் வாங்குபவரிடம்** எம்ஐடிசி-**யின் நகல் ஒப்படைக்கப்பட வேண்டும்**